

ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட குன்றத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்டச் செயலாளர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம் மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



ஒன்றிய அரசு பெட்ரோல் மற்றும் டீசல் விலையை கடுமையாக உயர்த்தியதைக் கண்டித்து தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்தும், பெட்ரோல், டீசல் விலை உயர்வால் விலைவாசி உயரும் அபாயம் உள்ளதையும், விலை உயர்வை திரும்பப் பெற வலியுறுத்தியும் சென்னை எழும்பூரில் உள்ள இராஜரத்தினம் ஸ்டேடியத்தில் 18.04.2026 அன்று மாலை 4 மணியளவில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் உள்ளிட்ட அனைத்து மத்திய தொழிற்சங்கத் தலைவர்கள், தொழிலாளர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# மதுரவாயல் தெற்குப் பகுதி கழகக் கூட்டம்!

## பகுதிக் கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி அறிக்கை!

சென்னை, மே 23

மதுரவாயல் தெற்கு பகுதிச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி கழகக் கூட்டம் இன்று - 23.05.2026 சனிக்கிழமை மாலை 5.30 மணியளவில் காரம்பாக்கம், சமயபுரம் பிரதான சாலையில் அமைந்துள்ள JVP மினி ஹாலில் பகுதி கழக அவைத் தலைவர் பி.எம்.செல்வராஜ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தெற்குப் பகுதிக்குட்பட்ட தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள். பகுதி அமைப்பாளர்கள், இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள், வட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு பகுதி கழக செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

பொருள்: 03.06.2026 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### நிலத்தை அதிகாரிகள் அளவீடு செய்யாததால் – கிருஷ்ணகிரி

# மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தீக்குளித்த மாற்றுத்திறனாளி சாவு!

## மாஜிஸ்திரேட்டிடம் மரண வாக்குமூலம்; உடலை வாங்க மறுத்து உறவினர்கள் தர்ணா!

சேலம், மே 23-

கிருஷ்ணகிரியில் நிலத்தை அதிகாரிகள் அளவீடு செய்யாததால் கலெக்டர் அலுவலகத்தில் தீக்குளித்த மாற்றுத்திறனாளி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது உடலை வாங்க மறுத்து சேலம் கலெக்டர் அலுவலகம் முன் உறவினர்கள் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி தாலுகா தியாகரசனப்பள்ளி அருகே மாதரசனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் வெங்கடேஷ் (45), மாற்றுத்திறனாளி.

விவசாயியான இவர், கடந்த திங்கட்கிழமை கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து, நிலபிரச்சினைக்கு உரிய முறையில் அளவீடு செய்து தராத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, கோஷமிட்டவாறு உடலில் பெட்ரோல் ஊற்றி தீக்குளித்தார். இதில் பலத்த காயமடைந்த வெங்கடேசை, பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் மீட்டு, கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர், மேல் சிகிச்சைக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தனர். அங்கு சிகிச்சை பலனின்றி வெங்கடேஷ் உயிரிழந்தார்.

இதுபற்றி கிருஷ்ணகிரி தாலுகா போலீசார், வழக்குப்பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர். நேற்று முன்தினம் காலை, வெங்கடேசின் உடலை பிரேதப் பரிசோதனை செய்வதற்கான ஏற்பாடுகளை போலீசார் செய்து, அவரது குடும்பத்தாரிடம் பேசினர். அப்போது, வெங்கடேசின் மனைவி திம்மக்கா, மகள்கள் ஷர்மிளா, சங்கீதா, மகன் சதீஷ் மற்றும் உறவினர்கள், வெங்கடேஷ் சாவுக்கு நீதி கிடைக்கும் வரை உடலை வாங்க மாட்டோம் எனக்கூறினர்.

தொடர்ந்து மனைவி, மகள்கள் மற்றும் உறவினர்கள் 15க்கும் மேற்பட்டோர், சேலம் கலெக்டர் அலுவலகத்திற்கு வந்து, அதிகாரிகளிடம் புகார் மனு கொடுத்தனர். பின்னர், கலெக்டர் அலுவலக நுழைவாயில் தரையில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர். வெங்கடேசின் மகள் ஷர்மிளா நிருபர்களிடம் கூறியதாவது: எனது தந்தைக்கு சொந்தமான நிலத்தை அளவீடு செய்து தரக்கோரி, அதிகாரிகளிடம் 2 முறை மனு அளித்த போதும், உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

பிறகு அளவீடு செய்வது போல், நிலத்தில் வந்து நின்று விட்டு, திரும்பி சென்று விட்டார்கள். 3வது முறையாக அரசு அதிகாரிகளை சந்தித்து முறையிட்டார். அங்கு என்ன நடந்தது எனத்தெரியவில்லை. அதன்பிறகு எனது தந்தை கடும் மனஉளைச்சலுக்கு ஆளாகி வேதனையில் இருந்தார். திங்கட்கிழமையன்று கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்துக்கு சென்று தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார். தற்போது அந்த நிலத்தை அளவீடு செய்து முடித்து விட்டதாகவும், அதற்கான ஆவணங்கள் இருப்பதாகவும் அதிகாரிகள் கூறுகின்றனர்.

அந்த ஆவணத்தில், எனது தந்தை கையெழுத்து போட்டிருப்பதாக கூறுகின்றனர். எனது தந்தைக்கு எழுத, படிக்க தெரியாது. அவர் கையெழுத்து போட மாட்டார். அவர் கைரேகை மட்டுமே வைப்பார். அந்த ஆவணங்கள் அனைத்தும் போலியானவை. அதனால், தந்தை வெங்கடேஷ் சாவுக்கு காரணமான அதிகாரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கும் வரை உடலை பெற்றுக்கொள்ள மாட்டோம். இவ்வாறு அவர் கூறினார்.

இதையடுத்து தர்ணாவில் ஈடுபட்டவர்களிடம் சேலம் டவுன் போலீசாரும், கிருஷ்ணகிரி தாலுகா இன்ஸ்பெக்டர் மணிமாறனும் பேச்சுவார்த்தை நடத்தினர். வெங்கடேஷ் இறப்பதற்கு முன்பு மாஜிஸ்திரேட்டிடம் மரண வாக்குமூலம் அளித்துள்ளார். அதனால் அவர், யார் மீதெல்லாம் புகார் தெரிவித்து இருக்கிறாரோ அவர்கள் மீது கட்டாயம் நடவடிக்கை எடுப்போம் என்று உறுதி கூறினர். அதை ஏற்று வெங்கடேசின் உறவினர்கள், தர்ணா போராட்டத்தை கைவிட்டனர்.



பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. பொதுக்குழு கூட்டம் பகுதி கழக செயலாளர்,மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் ப.காளேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. ஆர்.உமாசங்கர், பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, பா.டில்லி, பி.ஜே.வேந்தன், இரா.கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின், சு.மனோகரன், ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் அமைச்சர் மாவட்ட கழக செயலாளர் தா.மோ. அன்பரசன் ஆலோசனை வழங்கினார். கூட்டத்தில் ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103 பிறந்தநாள் விழா கொண்டாடுவது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

### தி.மு.க. விவசாய அணி

# மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## தி.மு.க, விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு!

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 26.05.2026 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாய அணித் தலைவர் என்.கே.கே.பெரியசாமி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள்
2. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 22.05.2026.

**ஏ.கே.எஸ். விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

போற்றுதலுக்குரிய கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பின்படி நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து சேலம் மத்திய மாவட்டச் செயலாளர் இரா.இராஜேந்திரன் அறிவிப்பின்படி - சேலம் மத்திய மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்றத் தொகுதிகளுக்கு கீழ்க்கண்டவாறு கள ஆய்வு நடைபெறவுள்ளது. இதில் மூத்த வழக்கறிஞர் ஏ.சரவணன் மற்றும் நா.இளையராஜா ஆகியோர் பங்கேற்கிறார்கள்.

| வ.எண் | நாள் | நேரம் | தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 1. | 25.05.2026 திங்கட்கிழமை | காலை 10.00 மணி | சேலம் தெற்கு தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |
| 2. | 26.05.2026 செவ்வாய்கிழமை | காலை 10.00 மணி | சேலம் வடக்கு தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |
| 3. | 27.05.2026 புதன்கிழமை | காலை 10.00 மணி | சேலம் மேற்கு தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |
| 4. | 28.05.2026 வியாழக்கிழமை | காலை 10.00 மணி | ஓமலூர் தொகுதி | கலைஞர் மாளிகை, மாவட்ட தி.மு.க அலுவலகம், சேலம். |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 22,05,2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# தமிழ்நாட்டில் கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, மே 23-

தமிழ்நாட்டில் தருமபுரி, சேலம், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய 5 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு எனவும் நாளை தருமபுரி, கிருஷ்ணகிரி, நீலகிரி, ஈரோடு, சேலம், திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, நாமக்கல் ஆகிய 10 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு எனவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.

இன்று 23-05-2026 நீலகிரி, ஈரோடு, சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், வேலூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் (மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில்) கூடிய கனமழை பெய்யக்கூடும். வட தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், தென் தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ்.ஆர். முகிலன்
## மே 23 (1999)



**1954இல் கழக உறுப்பினராகி பின்னர், கோமல் கிளைக் கழகச் செயலாளர் – மயிலாடுதுறை வட்டக் கழக துணைச் செயலாளர் – வட்டக் கழகப் பொறுப்புச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**மயிலாடுதுறை பகுதியில் கழகம் வளர உழைத்தவர்களில் இவரும் ஒருவர்.**

**1962இல் விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் – 1965இல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் – மிசா கைதியாக ஒரு மாத சிறைவாசம்; மேலும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**